செய்தி வெளியீடு எண். 53-2017 நாள்: 20.10.2017

## விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## சுகாதாரமற்ற நிலையில் உள்ள தனியார் வணிகவளாகங்கள் மற்றும் சுங்கச்சாவடிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப. அவர்கள் தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.3 லட்சம் அபராதம் விதித்து உத்தரவு.

*****

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சிப் பகுதி மற்றும் மயிலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.10.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் நகராட்சி, வருவாய்த்துறை, சுகாதாரத்துறை மற்றும் ஊரகவளர்ச்சித்துறை இணைந்து டெங்கு கொசு ஒழிப்பிற்கென பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களால் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகள் தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் திண்டிவனம் நகராட்சிக்கு உட்பட்ட பெருமாள்கோவில் தெரு, வாணி பிள்ளையார் கோவில் தெரு, கொட்டடிராமன் தெரு, திருவள்ளுவர் தெரு, நேருவீதி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது, பெருமாள் கோவில் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் தனியார் வணிக வளாகத்திலும், நேஷனல் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள தனியார் வணிக வளாகத்திலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, கொசு புழுக்கள் அதிக அளவில் இருப்பதை கண்டறிந்து வணிக வளாகத்தின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.1,00,000/- அபராதம் விதித்து நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டார். மேலும் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு டெங்கு கொசு உற்பத்தியை தடுப்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உரையாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து, மயிலம் ஊராட்சி ஒன்றியம் பெலாக்குப்பம், வெங்காடு ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஊராட்சிப் பகுதிகளில் தேவையற்ற டயர்கள், தேங்காய் ஓடுகள், பிளாஸ்டிக் குப்பைகள், மண்பாண்டங்கள், ஆட்டு உரல்கள் மற்றும் உபயோகமற்ற பொருட்களில் தண்ணீர் தேங்கி உள்ளதா என்பதை வீடு வீடாக சென்று ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அவற்றை நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை சுத்தமாக பராமரிக்கவும், குளோரின் கலந்து குடிநீரை விநியோகிக்கவும் ஊராட்சி செயலருக்கு அறிவுறுத்தினார். குடிநீரை காய்ச்சி பயன்படுத்த பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், டெங்கு காய்ச்சல் குறித்தும், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஎஸ் கொசு குறித்தும் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் சுங்கச்சாவடியில் சுகாதாரமற்ற முறையில், பராமரிப்பின்றி, டெங்கு கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் வகையில் டயர்கள், பாரல்கள் வைக்கப்பட்டிருந்ததோடு மட்டுமின்றி,

சுங்கச்சாவடியின் உள்பகுதியில் கழிவுநீர் வெளியேராமல் தேங்கி சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் வகையில் உள்ள காரணத்தினால், தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தின்கீழ், ரூ.1,00,000/- அபராதம் விதித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, திண்டிவனம் சார் ஆட்சியர் செல்வி.மெர்சிரம்யா,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.வி.மகேந்திரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சீனுவாசன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.சவுண்டம்மாள், திண்டிவனம் நகராட்சி ஆணையர் திரு.சுரேந்திரஷா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, நகராட்சி பணியாளர்கள் பலர் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.